இருபது வயதுக்குடுபட்ட ஒரு குறிப்பிட்ட தொகுதியினை முறையான தீர்ப்புத் திறன்களுடன் சாதாரண மக்களைத் துறவிகளாக்கும் நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்தல்;

(ஈ) குறுங்கால, மத்திய, நீண்டகால தியானப் பயிற்சித் திட்டங்களை நடத்துதலும் வசதியளித்தலும்;

(உ) பௌத்த வாழ்க்கை முறையினை மீள ஸ்தாபிப்பதற்கும் ஒழுங்கில் பௌத்த பொருளாதார, சமுக, கலாசார, கல்விசார் மற்றும் நெறிமுறைசார் எண்ணக்கருக்களுடன் தொடர்புடைய நிகழ்ச்சித் திட்டங்களை அமுலாக்குதல்;

(ஊ) மதுசாரம், போதைவஸ்துகளை முற்றாகத் துடைத் தொழிற்பதற்காக செயற்றிறன்மிகு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்;

(எ) மறுவாழ்வு, நலன்புரி மற்றும் அபிவிருத்தி நிகழ்சித் திட்டங்களை நடாத்துதல்;

(ஏ) பௌத்த நாகரீகத்திற்கும் வாழ்க்கைமுறைக்கும் ஒரு ஞான ஒளியையும் மீட்பையும் வழங்குவதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்;

(ஐ) ஞானத்தை அடையவற்குத் துணைபுரியும் கல்விசார் வெளியீடுகளை அச்சிடல் மற்றும் வெளியிடல்;

(ஒ) ஆன்மீக வாழ்விற்கு இட்டுச் செல்லும் வழியைப் போதிக்கக்கூடிய தர்மத்தில் ஆழ்ந்த அறிவினைக் கொண்ட ஒரு தொகுதி விரிவுரையாளர்களை துறவிகள் மற்றும் துறவிகள் அல்லாதவர்களிடமிருந்து உருவாக்கு வதற்கு கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகளை ஒழுங்கு செய்தலும் நடாத்துதலும்;

(ஓ) முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான முறையான வழி காட்டல்களையும் ஆலோசனைகளையும் வழங்கி சமுதாயத்திற்கு உதவுதல்;

(ஔ) தற்காலிக துறவினையேற்று அதனை செயற்றிறனுடன் பயில்வதற்கான வாய்ப்புகளை உருவாக்குதல்;

